தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, மாசி 13, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 பிப்ரவரி 25, வியாழக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அனைவரும் ஆட்சியாளரின் நீதி தவறாத நெறிமுறையை நம்பி வாழ்கின்றனர்.

1. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. சிவராஜ் சிவக்குமார், சித்த வைத்தியர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானங்கள். பிரபல சித்த வைத்தியர் திரு. சிவராஜ் சிவக்குமார் அவர்கள் 10–2–2021 அன்று உடல்நலக் குறைவால் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திரு. சிவராஜ் சிவக்குமார் அவர்களின் குடும்பம் பல தலைமுறைகளாக சித்த மருத்துவத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவர் சித்த வைத்தியத்தில் பல சாதனைகளை மேற்கொண்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.